# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : இந்திய அரசியலமைப்பு ஓர் அறிமுகம்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக் குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனி நபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## இந்திய அரசியலமைப்பு

- ஆள்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையே உள்ள தொடர்பை ஏற்படுத்தும் ஆவணமே அரசியலமைப்பு.
- அரசியல் முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளின் தொகுப்பே அரசியல் அமைப்பு.
- அரசியலமைப்புக்கு முரணாக நிர்வாகம் மற்றும் சட்டமன்றம் செயல்பட இயலாது.
- மக்களாட்சியின் அடிப்படையாக விளங்குவது அரசியலமைப்பு.
- அரசியலமைப்பை **158** நாடுகளின் அரசியலைப்பைக் கொண்டு அறிவியல் பூர்வமாக வகைப்படுத்தியவர் - அரிஸ்டாட்டில்.
- அரசியல் அறிவியலின் தந்தை
- உயிரியலின் தந்தை
- விலங்கியலின் தந்தை

அரிஸ்டாட்டில்

### அரசியலமைப்பு 6 வகைப்படும்

#### 1.எழுதப்பட்ட அரசியலமைப்பு ; (WRITTEN)

- அரசியலமைப்பு சட்டம் முழுமையாக எழுதப்பட்டு தொகுக்கப்பட்டு இருக்கும்.
- உலகின் மிகப்பழமையான எழுதப்பட்ட அரசியலமைப்பு = USA (**17/9/1787**)
- உதாரணம் : அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, இந்தியா.

#### 2.எழுதப்படாத அரசியலமைப்பு ; (UNWRITTEN)

- அரசியலமைப்பு சட்டம் எழுதப்படாமல் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றி நிர்வாகம் மேற்கொள்வதாகும்.
- அரசியலமைப்பு சட்டம் எழுதப்பட்டிருந்தாலும் முழுமையாக தொகுக்கப்பட்டிருக்காது.
- உதாரணம் : இங்கிலந்து, நியூசிலாந்து.

#### 3.நெகிழும் அரசியலமைப்பு ; (FLEXIBILITY)

- எளிதில் திருத்தம் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பு நெகிழும் அரசியலமைப்பு.

#### 4.நெகிழாத அரசியலமைப்பு ;

- எளிதில் திருத்தம் மேற்கொள்ள இயலாத அல்லது மிகக்கடினமான விதிமுறைகளை பின்பற்றிதிருத்தம் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பு.
- உலகில் மிகக்கடினமான விதிமுறைகளை பின்பற்றி திருத்தம் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பு = USA
- உதாரணம் = அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிச்சர்லாந்து.
- இந்திய அரசியலமைப்பு நெகிழும் ,நெகிழாத்தன்மை கொண்டது.

- இந்திய அரசியலமைப்பு 3 முறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

**PART-XX சட்டதிருத்தங்கள் (Art- 368)**

1.**சாதாரண பெரும்பான்மை (SIMPLE MAJORITY)**

- 50% (அ) பாதிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவுடன் திருத்தம் மேற்கொள்ளப்படும்

2.**சிறப்பு பெரும்பான்மை (SPECIAL MAJORITY)**

- **2/3** உறுப்பினர்களின் ஆதரவுடன் திருத்தம் மேற்கொள்ளப்படும் முறையாகும்.

3.**சிறப்பு பெரும்பான்மை** மற்றும் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலுடன் திருத்தம் மேற்கொள்ளப்படும் முறையாகும்.(SPECIAL MAJORITY AND RATIFICATION OF HALF OF THE STATE LEGISTRATES)

**5.ஒற்றையாட்சி அரசியலமைப்பு ; (UNITORY)**

- ஒரே ஒரு மத்திய அரசு மட்டும் அல்லது மத்திய அரசு,மாநில அரசு என இரு அரசுகள் இருந்தால் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருக்கும்.
- உதாரணம்: இங்கிலந்து, , பிரான்ஸ், பெல்ஜியம், நியூசிலாந்து, ஜப்பான்.

**6.கூட்டாட்சி அரசியலமைப்பு ; (FEDERAL)**

- FEDERATION என்ற ஆங்கிலச் சொல் FOEDUS என்ற லத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது.
- மாநிலங்கள் ஒன்றினைவதால் கூட்டாட்சி தோன்றுகிறது.

கூட்டாட்சி அரசியலமைப்பு பின்வரும் சிறப்புகளை பெற்றிருக்கவேண்டும்

- மத்திய அரசும்,மாநில அரசும் இருக்க வேண்டும்.
- எழுதப்பட்ட அரசியலமைப்பு பெற்றிருக்க வேண்டும்.
- மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப்பகிர்வு இருக்க வேண்டும்.
- அரசியலமைப்பு நெகிழாத்தன்மை பெற்றிருக்கவேண்டும்.
- அரசியலமைப்பு தனிமுதல் ஆதிக்கம் பெற்றிருக்கவேண்டும்.
- சுதந்திரமான நீதித்துறை அல்லது நீதித்துறை சுதந்திரம் பெற்றிருக்கவேண்டும்.
- உதாரணம்: அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிச்சர்லாந்து.
- சுவிட்சர்லாந்து கூட்டாட்சி முறையில் குழுஆட்சி முறை பின்பற்றப்படுகிறது.
- இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி தன்மை கொண்ட அறைகுறை கூட்டாட்சி அரசியலமைப்பு ஆகும் (QUASI FEDERAL CONSTITUTION).
- இந்தியா ஒற்றையாட்சி தன்மையைவிட கூட்டாட்சி தன்மையை அதிகம் பெற்றுள்ளது.

- இந்தியாவிலுள்ள கூட்டாட்சி கனடாவின் கூட்டாட்சியை மாதிரியாக கொண்டது.

## இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி

**I ஒழுங்குமுறைச்சட்டம் - பட்டயச்சட்டம் – REGULATION ACT – 1773**

**பிட் இந்தியச்சட்டம் (அ) PIT INDIA ACT – 1784**

**II. பட்டயச்சட்டம் - CHARTER ACT 1793**

**III. பட்டயச்சட்டம் – 1813**

**IV. பட்டயச்சட்டம் – 1833**

**V. பட்டயச்சட்டம் – 1853**

**I. இந்திய அரசுச்சட்டம் – GOVERNMENT OF INDIA ACT – 1858**

**1.இந்திய கவுன்சில் சட்டம் – 1861**

இச்சட்டத்தின்படி சட்டம் இயற்றும் பணியில் முதன்முதலில் இந்தியர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது .

**2. இந்திய கவுன்சில் சட்டம் – 1892**

**3. இந்திய கவுன்சில் சட்டம் (அ) மின்டோ மார்லி சட்டம் =** 1909

**II.இந்திய அரசுச்சட்டம் / மாண்டெகு - செம்ஸ்போர்டு சட்டம் – 1919**

**III. இந்திய அரசுச்சட்டம் – 1935**

**மௌண்ட்பேட்டன் திட்டம் (அ) ஜுன் 3 திட்டம் (அ) இந்திய பிரிவினை திட்டம் – 1947**

## இந்திய அரசியல் நிர்ணய சபை-INDIAN CONSTITIENT ASSEMBLY

- அமைச்சரவை தூதுக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று **JULY-1946** -ல் இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது.
- பிரிட்டிஷ் இந்திய பகுதியிலிருந்து **296** பேரும், மன்னராட்சி பகுதிகளிலிருந்து **93** பேரும் மொத்தம் **389** பேர் அரசியல் நிர்ணய சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்திய அரசியல் நிர்ணய சபையில் இடம்பெறாத 2 முக்கிய தலைவர்கள்

1. மகாத்மா காந்தி
2. முகமது அலி ஜின்னா

- **26-07-1947**-ல் பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தப்பட்டதால் இந்திய அரசியல் நிர்ணயசபை உறுப்பினர் எண்ணிக்கை **389** லிருந்து **299** ஆக குறைந்தது . பிரிட்டிஷ் இந்தியபகுதி உறுப்பினர்கள் 296 லிருந்து **229** ஆகவும் மன்னராட்சி பகுதி உறுப்பினர்கள் **93** லிருந்து **70** ஆகவும்குறைந்தது.
- **NOV-1946**-ல் இந்திய அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தப்பட்டது.
- **DEC-9-1946**–ல் இந்திய அரசியல் நிர்ணயசபையின் முதல் கூட்டம் நடைபெற்றது.
- இக்கூட்டத்தில் சச்சிதானந்தன் சின்ஹா இந்திய அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **DEC-11-1946** ல் நடைபெற்ற கூட்டத்தில இந்திய அரசியல் நிர்ணய சபையின் நிரந்தரதலைவராக DR.ராஜேந்திர பிர சாத்தும் , துணைத் தலைவராக H.C.முகர்ஜியும், சட்ட ஆலோசகராக B.N.ராவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- **DEC-13-1946** -ல் நடைபெற்ற கூட்டத்தில் ஜவகர்லால் நேரு நோக்கத் தீர்மானத்தை (OBJECTIVE RESOLUTION) முன்மொழிந்தார்.
- இந்நோக்க தீர்மானம் **22-1-1947**-ல் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்நோக்க தீர்மானமே பின்னர் சில திருத்தங்களுக்கு உட்பட்டு இந்திய அரசியலமைப்பின் முகவுரையாக வைக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க அரசியல் நிர்ணயசபை **23** குழுக்களை ஏற்படுத்தியது.

  முதன்மைகுழுக்கள் = **8**
  சிறுகுழுக்கள் = **15**

- 23 குழுக்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது வரைவுக்குழு.

## வரைவுக்குழு – DRAFTING COMMITTEE

- **29-AUG-1947** -ல் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை இயற்றும் பணிக்காக இந்திய அரசியலமைப்பின் தந்தை (அ) சிற்பி டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் தலைமையில் 7 உறுப்பினர்களைக் கொண்ட வரைவுக்குழு ஏற்படுத்தப்பட்டது.
- வரைவுக் குழுவின் வழிகாட்டியாக விளங்கியவர் = ஜவகர்லால்நேரு
- வரைவுக்குழு உறுப்பினர்கள்

1. டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் (தலைவர்)
2. கோபாலசாமி ஐயங்கார்
3. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
4. KM முன்ஷி
5. சையது முகமது சதஉல்லா
6. N.மாதவ்ராவ் (BL மிட்டா பதவி விலகியதால் நியமிக்கப்பட்டார்)

7. T.T.கிருஷ்னமாச்சாரி (D.P. கெய்தான் இறந்ததால்)

- டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் தலைமையிலான வரைவுக்குழு **OCT-1947**-ல் தனது முதல் வரைவை தயாரித்து **21-FEB-1948** அன்று வெளியிட்டது.
- **OCT-1948** - ல் 2-வது வரைவை தயாரித்து வெளியிட்டது.
- **4-NOV-1948** -ல் 3வது (ம) இறுதி வரைவை தயாரித்து வெளியிட்டது.
- இவ்வரைவு **15-11-1948** முதல் **17-10-1949** வரை இந்திய அரசியல் நிர்ணயசபையால் பரீசீலிக்கப்பட்டு **26-11-1949**ல் இந்திய அரசியலமைப்பு சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளான **26-11-1949** அன்றே 15 விதிகள்(Art) தற்காலிகமாக நடைமுறைக்கு வந்தது
- சரத்து == **5 , 6 , 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392, 393**
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தை ஏற்றுக்கொண்டு அரசியல் நிர்ணயசபையின் **284** உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர் (**284/299**)
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க **2** ஆண்டுகள் **11** மாதங்கள் **18** நாள்கள் ஆனது. (இந்திய அரசியல் நிர்ணயசபை செயல்பட்ட காலம்)
- **15-8-1947**முதல்**26-11-1949** வரை இந்திய அரசியல் நிர்ணயசபை தற்காலிக பாராளுமன்றமாகவும் செயல்பட்டது.
- தற்காலிக பாராளுமன்றத்தின் முதல் தலைவர் = கனேஷ் வாசுதேவ் மாவ்லங்கர் (G.V.மாவ்லங்கர்)
- சுதந்திர இந்தியாவின் முதல் சபாநாயகர் = G.V.மாவ்லங்கர்
- இந்திய அரசியல் நிர்ணயசபை மொத்தம் **11** கூட்டங்களை **114** நாள்கள் நடத்தியது.
- முதல் கூட்டம் = **9-12-1946** = சச்சிதானந்தன் சின்ஹா
- கடைசி கூட்டம் = **24-1-1950** = ராஜேந்திர பிரசாத்
- கடைசி கூட்டத்தில் தேசிய பாடலாக வந்தே மாதரமும் , தேசிய கீதமாக ஜன கன மண பாடலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க **64** லட்சம் செலவிடப்பட்டது.
- **26-1-1950**-ல் இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்து இந்தியா குடியரசு நாடானது.
- கவர்னர் ஜெனரல் பதவிக்கு பதிலாக குடியரசு தலைவர் பதவி ஏற்படுத்தப்பட்டது.

- **REASON = 26-1-1950**

  **1929-DEC-31** அன்று ஜவகர்லால் நேரு தலைமையில் நடைபெற்ற லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் **JAN-26**-ம் நாளை பூரண சுதந்திர தினமாக கொன்டாட தீர்மானிக்கப்பட்டது.

- **26-1-1930**-ல் முதல் பூரண சதந்திரம் தினம் கொன்டாடப்பட்டது.
- இதன் நினைவாக **JAN-26**-ல் அரசியலமைப்பு சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்து குடியரசு தினமாக கொன்டாடுகிறோம்.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தபோது **8** அட்டவணைகள் (8 SCHEDULES) , **22** பாகங்கள்(22 PARTS),**395** விதிகள்(ARTICLES) இருந்தது.
- தற்போது (2015-ல்) **12** அட்டவணைகள், **25** பாகங்கள், **468** விதிகள் உள்ளன.
- SCHOOL BOOK (2010) 12 அட்டவணை, 24 பாகங்கள் , 449 விதிகள் உள்ளன

வாய்மையே வெல்லும்